# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-3 Date : 12.09.2024
Case No. : **O.S. 56/2019** Nationality : Indian
Name : ஆனந்தராஜ் (மண்டல துணை வட்டாட்சியர்) Religion :
Age : 46
Father's/Husband's Name :
Village :
Taluk :

<u>வா.சா.3</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து திருவிடைமருதூர் வட்டாட்சியருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதின்பேரில் அவரால் எனக்கு சாட்சியம் அளிக்க அதிகார கடிதம் வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள எஸ்.புதூர் கிராமம் பழைய புல எண் 214/28 புல எண்கள் 326/36, 326/37, 326/38, 326/39 மற்றும் 326/40 ல் கண்ட சொத்துகளுக்கான யுடிஆர் அ பதிவேடு, புல வரைபடம், பட்டா, அடங்கல் பதிவேடு ஆகியவற்றை எடுத்து வந்துள்ளேன். மேற்படி சொத்திற்கான யுடிஆர் அ பதிவேடு உண்மை நகல் , சிட்டா, நத்தம் அடங்கல், அடங்கல் பதிவேடு, புல வரைபடம் ஆகியவற்றின் உண்மை நகல் கள் முறையே **சா.சா.ஆ.1** முதல் **சா.சா.ஆ.5** வரை குறியீடு செய்யப்படுகிறது. எங்கள் அலுவலகத்தில் யுடிஆர் பதிவேடுகள் மட்டும்தான் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆர்எஸ்ஆர் மற்றும் ஆர்ஓஆர்

பதிவேடுகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/-N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.